Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 Of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........ **P.W.10**

Defence Court

| | |
|---|---|
| Name | டாக்டர் சுதாகர் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

**2வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்று போய்விட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**(சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**முதல்விசாரணை**:

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2020 ஆம் ஆண்டு மேற்படி பணியில் இருக்கும் போது 06.09.2020 அன்று பிற்பகல் 3.20 மணியளவில் பண்ருட்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பண்ருட்டி காவல் நிலைய குற்ற எண் 2040/2020 பிரிவுகள் 147, 294(பி) 302 இதச என்ற வழக்கில் இறந்து போன சாந்தகுமார் வயது 26 என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறிய பிரேத பரிசோதனை சான்று கோரி கொடுத்து அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை மேற்படி பண்ருட்டி காவல் நிலைய முதல்நிலை பெண் காவலர் 1419 திருமதி. வேண்டாவைரம் என்பவர் மூலம் நான் பெற்று எமது மருத்துவமனை சவகிடங்கிற்கு சென்று இறந்து போன சாந்தகுமார் என்பவரது பிரேதத்தை அடையாளம் காட்டியதன் பேரில் மாலை 4.00 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

**வெளிப்புறக்காயங்கள்:-**

1. வலது மார்பில் தையல் இட்ட காயம் 2x0.5cm

2. வயிற்றுப்பகுதியில் ஒரு தையல் இட்ட காயம் 3x0.5cm

3. இடது மார்பில் ஒரு தையல் இட்ட காயம் 3x0.5cm

4. முன்தலையில் ஒரு தையல் இட்ட காயம் 2x0.5cm

5. தலையில் ஒரு தையல்இட்ட காயம் 2x0.5cm

பிண விரைப்பு தன்மை முன் கைகளில் காணப்பட்டது. இறப்பின் நேரம் பிரேத பரிசோதனைக்கு 14.00 முதல் 24.00 மணி நேரத்திற்கு முன் இறந்திருக்க கூடும்.

**உள்புறக்காயங்கள்:-**

1. இடது பக்க நுரையீரலில் ஒரு கிழிந்தக்காயம் 3x1x4cm அளவில் காணப்பட்டது. நுரையீரலுக்கு வெளியே சுமார் ஒரு லிட்டர் அளவிற்கு இரத்தம் காணப்பட்டது.

2. மற்ற உள்ளுறுப்புகள் அனைத்தும் வெளிர்ந்து காணப்பட்டது.

பின்னர் குடல் உறுப்புகள் விழுப்புரம் தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அது குறித்து கிடைக்க பெற்ற விஸ்ராஅறிக்கை VPM/TOX-H/1362/2020 அறிக்கையின் படி இறந்த நபருக்கு குடல் உள்ளுறுப்புகளில் விஷமோ ,Alchol இல்லை என்று தெரிய வந்தது.

இறந்த நபருக்கு நுரையீரலில் ஏற்பட்ட குத்துக்காயம் காரணமாக இரத்தப்போக்கு ஏற்பட்டு அதனால் இறப்பு நிகழ்ந்துள்ளது என்று இறுதி அறிக்கை வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையும், தடயவியல் அறிக்கையும் அதசாஆ 7 வரிசை ஆகும்.** கூர்மையான ஆயுதத்தினால் தாக்கும் பட்சத்தில் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த எந்த ஆயுதங்களால் தாக்கினால் எந்த எந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு

உள்ளது என்று போலிசார் என்னிடம் ஆயுதங்களை காண்பித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*